**கவனிக்க.**- 2010.06.04 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.
**கவனிக்க.**- இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியவை சிங்களம் மற்றும் ஆங்கில மொழியில் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1658 - 2010 ජූනි 11 වැනි සිකුරාදා - 2010.06.11

*1658 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) – மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | 1062 | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களாவன, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனையும் கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, யூன் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, யூன் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.


B 79874 - 7,000 (2010/06)
F1-(T)

# மாகாண சபை அறிவித்தல்கள்

எனது இல. : வமே/மாச/2/1/4/1

## வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2009 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மாகாண சபை (சம்பள, கொடுப்பனவு) த் திருத்தக் கொள்கைப் பிரகடனம்

இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையினால் 2010.05.04 ஆந் திகதி நிறைவேற்றப்பட்டு, 2010.05.06 ஆந் திகதி வடமேல் மாகாண ஆளுநரால் அனுமதியளிக்கப்பட்ட மேற்படி கொள்கைப் பிரகடனத்தை அனைவரும் அறிந்து கொள்வதற்காக இங்கு கீழே பிரசுரிக்கின்றேன்.

எஸ். ஆர். ஏ. சமரகோன்,
செயலாளர்,
வடமேல் மாகாண சபை.

வடமேல் மாகாண சபை அலுவலகம்,
வடமேல் மாகாணம்,
குருநாகல்,
2010.05.10.

### 2009 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க மாகாண சபை (சம்பளங்கள், படிகள் செலுத்துதல்) (திருத்த) நியதிச் சட்டம்

2000 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, 2001 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, 2002 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, 2004 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மற்றும் 2006 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, நியதிச்சட்டங்களினால் திருத்தப்பட்ட வடமேல் மாகாண சபையின் 1989 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மாகாண சபை (சம்பளங்கள், படிகள் செலுத்துதல்) நியதிச்சட்டத்தை திருத்துவதற்கான நியதிச்சட்டமாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப் படும் :-

*சுருக்கப் பெயர்.*

1. இந்நியதிச்சட்டம் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2009 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கத்திற்கான மாகாண சபை (சம்பளங்கள், படிகள் செலுத்துதல்) (திருத்த) நியதிச்சட்டம் என அழைக்கப்படும்.

*முதன்மை நியதிச்சட்டத்தின் 2 (ඉ) 2 (ඊ) உப பிரிவு களைத் திருத்துதல்.*

2. (1)முதன்மை நியதிச்சட்டத்தின் 2 (ඉ) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பத்தாயிரம் ரூபா என்னும் சொற்களை நீக்கி, அதற்குப் பதிலாக வடமேல் மாகாண அமைச்சர் சபை அனுமதிக்கப்பட்ட வடமேல் மாகாண ஆளுநரின் ஒருமைப்பாட்டின் படி கொடுப்பனவு என்ற சொற்களை பதிலீடு செய்வதன் மூலமும்,

(2)முதன்மை நியதிச் சட்டத்தின் 2 (ඊ) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏழாயிரத்து ஐநூறு ரூபா என்னும் சொற்களை நீக்கி, அதற்குப் பதிலாக வடமேல் மாகாண அமைச்சர் சபை அனுமதிக்கப்பட்ட வடமேல் மாகாண ஆளுநரின் ஒருமைப்பாட்டின் படி கொடுப்பனவு என்ற சொற்களை பதிலீடு செய்வதன் மூலமும், திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

3.இந்நியதிச்சட்டத்தின் சிங்களம் மற்றும் தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை இருக்கும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்கும்

6-156

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.